# இரவு நேர சிறப்பு தூய்மைப் பணி

## அமைச்சர் பி. மூர்த்தி தொடங்கிவைத்தார்

**மதுரை, ஆக. 30:** மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் சுற்றுப்புறப் பகுதிகளில் சிறப்புத் திட்டத்தின் கீழ், இரவு நேர தீவிர தூய்மைப் பணி சனிக்கிழமை இரவு தொடங்கப்பட்டது.

மதுரையை தூய்மையான நகரமாகப் பராமரிக்கும் நோக்கில் 'எழில்கூடல் - தூய்மை நம் பெருமை' என்ற சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் வீதிகளைத் தூய்மை செய்யும் பணி சனிக்கிழமை நடைபெற்றது.

இதன் தொடக்க நிகழ்ச்சி மீனாட்சி அம்மன் சந்நிதி வீதியில் நடைபெற்றது. இதில் தமிழக வணிக வரி, பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமை வகித்து, தூய்மைப் பணியைத் தொடங்கிவைத்தார்.

மாவட்ட ஆட்சியர் கே.ஜே. பிரவீன்குமார், மாநகராட்சி மேயர் வ. இந்திராணி, ஆணையர் சித்ரா விஜயன், சட்டப்பேரவை உறுப்பினர் மு. பூமிநாதன், மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் அறங்காவலர் குழுத் தலைவி ருக்மணி பழனிவேல்ராஜன், துணை மேயர் தி. நாகராஜன், வர்த்தக சங்கங்களின் நிர்வாகிகள், விவசாய சங்க நிர்வாகிகள், தன்னார்வ தொண்டு நிறுவன நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரையில் சனிக்கிழமை இரவு நேர சிறப்பு தூய்மைப் பணியைத் தொடங்கிவைத்த வணிக வரி, பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி. உடன், மாவட்ட ஆட்சியர் கே.ஜே. பிரவீன்குமார், மாநகராட்சி மேயர் வ. இந்திராணி, ஆணையர் சித்ரா விஜயன் உள்ளிட்டோர்.

இதையடுத்து நடைபெற்ற தூய்மைப் பணியில் தூய்மைப் பணியாளர்கள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், தன்னார்வலர்கள், பொதுமக்கள் என சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

வருகிற நாள்களில் மாநகராட்சியில் உள்ள 100 வார்டுகளிலும் இந்த இரவு நேர சிறப்பு தூய்மைப் பணி நடைபெறும் எனக் கூறப்படுகிறது.

தூய்மையான நகரங்களின் பட்டியலில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு முன்னிலை பெற்றிருந்த மதுரை அண்மையில் வெளியிடப்பட்ட இந்திய தூய்மை நகரங்களின் பட்டியலில் பெரும் பின்னடைவுக்கு உள்ளாகியிருந்தது. இது பல்வேறு தரப்பினரிடையே பேசுபொருளான நிலையில், இந்த இரவு நேர சிறப்பு தூய்மைப் பணி தொடங்கப்பட்டுள்ளது.

# அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றிய வளர்ச்சிப் பணிகள்

## ஆட்சியர் ஆய்வு



மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஒன்றியம், முடுவார்பட்டியில் மகளிர் உரிமைத் தொகை விண்ணப்பம் குறித்து நேரடியாக கள ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் கே.ஜே. பிரவீன்குமார்.

**மதுரை, ஆக. 30:** மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் கே.ஜே. பிரவீன்குமார் சனிக்கிழமை ஆய்வு செய்தார்.

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட சரந்தாங்கி கிராமத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3.50 லட்சம் மானியத்தில் கட்டப்படும் புதிய வீடுகள், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ், ரூ. 88 லட்சத்தில் நடைபெறும் கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டும் பணி, முடுவார்பட்டியில் மக்களவை உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ. 12 லட்சத்தில் நடைபெறும் நியாயவிலைக் கடை கட்டும் பணி ஆகியவற்றை ஆட்சியர் ஆய்வு செய்தார்.

இதைத் தொடர்ந்து, முடுவார்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்தில் ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார்.

பிறகு, 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் மகளிர் உரிமைத் தொகை கோரி அளிக்கப்பட்ட மனுக்கள் குறித்து நேரடியாகக் கள ஆய்வு மேற்கொண்டார்.

இதையடுத்து, முடுவார்பட்டி ஊராட்சி அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை, அவர்களது உயரம், எடை, குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் ஆகியவை குறித்தும் அவர் ஆய்வு செய்தார்.

## கீழே தவறி விழுந்த தூய்மைப் பணியாளர் உயிரிழப்பு

**மதுரை, ஆக. 30:** கீழே தவறி விழுந்த மதுரை மாநகராட்சி தூய்மைப் பணியாளர் உயிரிழந்தார்.

மதுரை சோலையழகுபுரம் பகுதியைச் சேர்ந்த பிலாவடி மகன் சபரி மணிகண்டன் (31). மதுரை மாநகராட்சித் தூய்மைப் பணியாளராகப் பணியாற்றி வந்தார். இவர் மதுரை சுப்பிரமணியபுரம் தண்டுமாரியம்மன் கோயில் பகுதியிலிருந்து அண்மையில் இரவில் வீட்டுக்கு நடந்து சென்ற போது மயங்கி விழுந்தார். அவரை அக்கம்பக்கத்தினர் மீட்டு, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் உயிரிழந்தார்.

இதுகுறித்து ஜெய்ஹிந்துபுரம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

# பால் வியாபாரி கொலை வழக்கில் 2 பேர் கைது

**திருப்பரங்குன்றம், ஆக. 30:** திருப்பரங்குன்றம் அருகே விளாச்சேரியில் பால் வியாபாரி கொலை செய்யப்பட்ட வழக்கில் தலைமறைவாக இருந்த இருவரை போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர்.

விளாச்சேரி மொட்டமலைப் பகுதியைச் சேர்ந்தவர் பரமன். பால் வியாபாரியான இவரது வீட்டின் அருகே இவரது உறவினரான கரண் (25) வசித்து வந்தார். இருவருக்கும் இடையே ஏற்கெனவே சொத்து பிரச்னை இருந்தது. பரமன் மாடு வளர்ப்பதால் அந்தப் பகுதியில் துர்நாற்றம், கொசுத் தொல்லை காரணமாகவும் இருவருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது. கடந்த வியாழக்கிழமை இரவு இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டபோது கரணும் அவரது நண்பரான சேதுபிரசாத் (31) என்பவரும் சேர்ந்து பரமனை அரிவாளால் வெட்டிக் கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றனர்.

இதுகுறித்து திருநகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து இருவரையும் தேடிவந்த நிலையில், தலைமறைவாக இருந்த கரண், சேதுபிரசாத் ஆகிய இருவரும் சனிக்கிழமை மாவட்ட நீதிமன்றத்தில் சரணடையச் சென்றனர்.

அப்போது, அங்கு பாதுகாப்புப் பணியிலிருந்த போலீஸார் இருவரையும் பிடித்தனர். பின்னர், திருநகர் போலீஸார் இருவரையும் கைது செய்தனர். மேலும், பரமனின் சகோதரர்களான அரிச்சந்திரன், குருபன், குருபனின் மகன் சந்துரு ஆகியோர் மீதும் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

## மயங்கி விழுந்த படை வீரர் உயிரிழப்பு

**மதுரை, ஆக. 30:** பணியின் போது மயங்கி விழுந்த துணை நிலை ராணுவத்தின் இந்தோ-திபெத் படை உதவி தளபதி வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

மதுரை அருகே உள்ள இடையபட்டியில் இந்தோ-திபெத் எல்லைப் பாதுகாப்புப் படையின் பிரிவு மையம் செயல்படுகிறது. இந்த மையத்தில் உதவித் தளபதியாகப் பணியாற்றிய சிவகுமார் (38) வெள்ளிக்கிழமை பணியிலிருந்த போது திடீரென மயங்கி கீழே விழுந்தார். அவரை சக வீரர்கள் மீட்டு, மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார்.

இதுகுறித்து ஒத்தக்கடை போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

# ரயில் முன் பாய்ந்து இளைஞர் தற்கொலை

**திருப்பரங்குன்றம், ஆக. 30:** திருமங்கலம் அருகே காதல் தோல்வியால் ரயில் முன் பாய்ந்து இளைஞர் தற்கொலை செய்து கொண்டார்.

தண்டவாளப் பராமரிப்புப் பணியில் ஈடுபடும் ரயில் திருமங்கலத்திலிருந்து விருதுநகர் நோக்கி வெள்ளிக்கிழமை சென்றது. அப்போது, திருமங்கலம் ஆறு கண் பாலம் அருகே தீயணைப்பு நிலையத்தின் பின்புறப் பகுதியில் இந்த ரயில் வந்த போது, இளைஞர் ஒருவர் ரயில் முன் திடீரென பாய்ந்து தற்கொலை செய்து கொண்டாராம்.

தகவலறிந்து வந்த ரயில்வே போலீஸார் அவரது உடலை மீட்டு, கூறாய்வுக்காக திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து விசாரணை நடத்தினர். விசாரணையில், அவர் திருமங்கலம் தெற்குத் தெருவைச் சேர்ந்த மாயக்கண்ணின் மகன் ஹரிஷ் (23) என்பதும், சமையல்கலை படிப்பு படித்துள்ள இவர், காதல் தோல்வியால் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டதும் தெரியவந்தது.

இதுகுறித்து விருதுநகர் ரயில்வே போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.


**CHANGE OF NAME**

I, P J M Vijey Chakkaravarthy, son of Thiru P J Manoharan, born on 22nd September 1998 (District of Birth: Theni), residing at Old No. 6, New No. 4, Selikka Subbaiyar Street, Thavittu Santhai, Madurai-625 001, shall henceforth be known as JEYAVEERA VIJEY CHAKRAVARTHY PJ M

PJ M VIJEY CHAKKARAVARTHY

Madurai,
18th October 2024



**Tamil Nadu Private Professional Colleges Association – Health Sciences**

'Prasanna Enclave' 1st floor, No.30, Bharathi Avenue, (near Kotturpuram Railway Station), Kotturpuram, Chennai - 600 085.

Admission for **M.Pharm. Degree Course (2025-26 session)** in unaided private colleges through Entrance Examination

The Committee to Regulate - Monitor the admissions of students to professional courses by the self financing Professional Arts & Science College Vide Letter No. COA/M.Pharm/082/2025 dated 26.08.2025 authorizes this Association to prepare the General Merit List for the management quota seats (M.Pharm course 2025-26 session). The online application form, hall ticket & prospectus shall be downloaded from the website www.tnppcahs.org

**Date of online application form submission begins from : 01.09.2025**
**Last date for submission of online application form : 12.10.2025**
**Date of Downloading Hall ticket : 18.10.2025**
**Date of Entrance Examination : 19.10.2025**
**Publication of Merit List/Results : 24.10.2025**

The candidate should send the downloaded filled in online application form (with enclosures) on or before **18.10.2025.**

Tel: 044-24422211

**Mr.J.Jayaseelan, Secretary.**


## நிதி உள்சேர்க்கை முகாம்...




தேனி மாவட்டம், திருமலாபுரத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிதி உள்சேர்க்கை முகாமில் பிரதமரின் பீமா யோஜனா திட்டத்தின் கீழ், பயனாளி ஒருவருக்கு ரூ. 2 லட்சத்துக்கான காசோலையை வழங்கிய ரிசர்வ் வங்கியின் பொது மேலாளர் (சென்னை) எம். ராஜ்குமார், தேனி மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கார்த்திகேயன், திண்டுக்கல் மண்டல முதுநிலை மேலாளர் பி. சந்திரகுமார் . வங்கிச் சேவைகள், மத்திய அரசின் நிதிசார் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த முகாம் நடைபெற்றது.

# இரு சாலை விபத்துகளில் இருவர் உயிரிழப்பு

**மதுரை, ஆக. 30:** மதுரை அருகே இரு இடங்களில் நிகழ்ந்த சாலை விபத்துகளில் பெண் உள்பட 2 பேர் வெள்ளிக்கிழமை உயிரிழந்தனர்.

மதுரை அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீராம் சிங் மகன் கன்பத்சிங் (56). இவர் இரு சக்கர வாகனத்தில் பாண்டி கோயில் சுற்றுச் சாலையிலிருந்து வீட்டுக்கு சென்று கொண்டிருந்தார். திருச்சி நெடுஞ்சாலையில் வந்த போது, இந்த வாகனமும், எதிரே வந்த சரக்கு வாகனமும் மோதிக் கொண்டன.

இதில் பலத்த காயமடைந்த கன்பத்சிங்கை அக்கம்பக்கத்தினர் மீட்டு, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் உயிரிழந்தார்.

இதுகுறித்து சரக்கு வாகன ஓட்டுநரான, மேலூர் பகுதியைச் சேர்ந்த ஜெயபாண்டி மீது மதுரை மாநகர் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

**மற்றொரு விபத்து:** மதுரை மாவட்டம், மேலூர் அருகேயுள்ள தெற்குத்தெரு கிராமத்தைச் சேர்ந்த மலுவேந்தி மனைவி பாண்டியம்மாள் (59). இவர் மேலூர் சாலையில் உள்ள முனியாண்டி கோயில் பகுதியில் சாலையைக் கடக்க முயன்றார்.

அப்போது, அந்த வழியாக வந்த கார் பாண்டியம்மாள் மீது மோதியது. இதில் பலத்த காயமடைந்த அவரை அக்கம்பக்கத்தினர் மீட்டு, மேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் உயிரிழந்தார்.

இதுகுறித்து கார் ஓட்டுநரான மதுரை துரைசாமிநகரைச் சேர்ந்த அருண் விஜய் மீது மேலூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# உடல் ஆரோக்கியம், ஒழுக்கத்தை அளிப்பது விளையாட்டு

## முன்னாள் கிரிக்கெட் வீரர் அனிருதா ஸ்ரீகாந்த்



மதுரை பசுமலை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுடன் முன்னாள் கிரிக்கெட் வீரர் அனிருதா ஸ்ரீகாந்த். உடன் கல்லூரிச் செயலர் எஸ்.ஆர். ஸ்ரீதர், கௌரவத் தலைவர் எஸ். ராஜகோபால், துணைத் தலைவர் ஆர். ஜெயராம், கல்லூரி முதல்வர் அ. ராமசுப்பையா உள்ளிட்டோர்.

**திருப்பரங்குன்றம், ஆக. 30:** விளையாட்டு மட்டுமே மனிதனுக்கு உடல் ஆரோக்கியம், புத்திக் கூர்மை, ஒழுக்கத்தை அளிக்கிறது என முன்னாள் கிரிக்கெட் வீரர் அனிருதா ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

மதுரை பசுமலை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் தேசிய விளையாட்டு தினம் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. இதற்கு கல்லூரி முதல்வர் அ. ராமசுப்பையா தலைமை வகித்தார். செயலர் எஸ்.ஆர். ஸ்ரீதர், கல்லூரித் தலைவர் எம். விஜயராகவன், கௌரவத் தலைவர் எஸ். ராஜகோபால், துணைத் தலைவர் ஆர்.ஜெயராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொருளாளர் ஆழ்வார்சாமி, சுயநிதிப் பிரிவு இயக்குநர் பிரபு ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

இதில் முன்னாள் கிரிக்கெட் வீரர் அனிருதா ஸ்ரீகாந்த் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கிப் பேசியதாவது:

விளையாட்டு என்பது பொழுதுபோக்கு நிகழ்வு அல்ல. ஒரு மனிதனுக்கு புத்திக் கூர்மையையும், உடல் ஆரோக்கியத்தையும், ஒழுக்கத்தையும் அளிப்பது விளையாட்டாகும். வரும் தலைமுறைகள் விளையாட்டுத் துறையில் தனது பங்களிப்பை நிலைநாட்டி தமிழகத்துக்கும், நாட்டுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்றார் அவர்.

இதைத் தொடர்ந்து, மாணவ, மாணவிகளுடன் அவர் கலந்துரையாடினார். முன்னதாக, உடல் கல்வி இயக்குநர் ராகவன் வரவேற்றார். முன்னாள் மாணவர் சந்தோஷ்குரு கிருஷ்ணா நன்றி கூறினார். உதவிப் பேராசிரியர் ரஞ்சித்குமார் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

# 175-ஆவது தமிழ்க்கூடல்: நூல்கள் வெளியீடு

**மதுரை, ஆக. 30:** மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும், மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரியும் இணைந்து அண்மையில் நடத்திய 175-ஆவது தமிழ்க்கூடல் நிகழ்வில் நூல்கள் வெளியிடப்பட்டன.

உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகக் கூட்ட அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மேலூர் அரசு கலைக் கல்லூரியின் முன்னாள் இணைப் பேராசிரியர் அம்பை மணிவண்ணன் 'மதுரையும் வரலாற்றுச் சின்னங்களும்' என்ற தலைப்பில் பேசியதாவது:

கல்வி வளர்ச்சிக்கு சமணர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. கல்விச் சாலைகள் வருவதற்கு அவர்களும் காரணம். மதுரையில் கீழவளவு, அழகர் மலை, முத்துப்பட்டி, தொங்கர் புளியங்குளம் ஆகிய பகுதிகளில் சமணர்கள் வாழ்ந்துள்ளனர். சமண மலையில் கல்லூரி செயல்பட்டுள்ளது.

பரிபாடலில் மதுரையின் பெயர் ஆலவாய் என்று கூறப்பட்டுள்ளது என்றார் அவர்.

தொடர்ந்து, எழுத்தாளர் சு.வீ. ரேணுகாதேவியின் கட்டுரை நூலான உருமாற்றம், அ. அழகையாவின் சிறுகதை நூலான நெல்லைத் தமிழ் சிறுகதைகள், இளங்கோவன் கார்மேகத்தின் நாடக நூலான தபால், கவிஞர் கவிஜியின் கவிதை நூலான ஆனைமலைக் காடுகளில் சுள்ளி பொறுக்குகிறேன் ஆகிய நான்கு நூல்கள் வெளியிடப்பட்டன. நூலாசிரியர்கள் அனைவரும் ஏற்புரையாற்றினர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழறிஞர்கள், மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரிப் பேராசிரியைகள், மாணவிகள், உலகத் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள், தமிழ் ஆர்வலர்கள், கவிஞர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, உலகத் தமிழ்ச் சங்க ஆய்வறிஞர் சு. சோமசுந்தரி வரவேற்றார். சங்கத்தின் ஆய்வு வளமையர் ஜ. ஜான்சி ராணி நன்றி கூறினார்.

## முதல்வர் கோப்பை போட்டி...





மதுரை பந்தயச் சாலையிலுள்ள எம்.ஜி.ஆர். விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்ற முதல்வர் கோப்பைக்கான வாலிபால் போட்டியில் பங்கேற்ற இளைஞர்கள். (வலது) கூடைப்பந்து போட்டியில் பங்கேற்ற மாணவிகள்.


**UJJIVAN SMALL FINANCE BANK**

**பதிவு அலுவலகம்:** கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்களா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

**இ-ஏல விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.**

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண் | கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி | கடன் நிலுவைத்தொகை | குறைந்தபட்ச கேட்பு விலை | டேவணித் தொகை (EMD) |
|---|---|---|---|---|---|
| **கிளை அலுவலகம்: எண்.1/1/109, கம்பம் மெயின் ரோடு, தென்கரை, பெரியகுளம், தேனி மாவட்டம், தமிழ்நாடு - 625601** | | | | | |
| 1. | 1602210170000026 / 1.Mr. ஜெயராமன் M 2.Mrs. ரேவதி J | (I) 13.07.2021 (ii) ₹ 9,75,915/- (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து பதினைந்து மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 09.03.2022 & நேரடி சுவாதீனம் - 24.05.2025 | 23.07.2025 அன்றுள்ளபடி ₹21,41,527.41 (ரூபாய் இருபத்து ஒன்று லட்சத்து நாற்பத்து ஒன்றாயிரத்து ஐநூற்று இருபத்து ஏழு மற்றும் பைசா நாற்பத்து ஒன்று மட்டும்) | ₹ 15,77,000/- (ரூபாய் பதினைந்து லட்சத்து எழுபத்து ஏழாயிரம் மட்டும்) | ₹ 1,57,700/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து எழுநூறு மட்டும்) |
| **சொத்து விவரம்:** திண்டுக்கல் பதிவு மாவட்டம், வத்தலகுண்டு சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட சர்வே எண்.223/1, பரப்பு 0.98.5 ஹெக்டேர் அல்லது 2 ஏக்கர் 43 செண்டு நிலம் பல்வேறு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு இதில் **மனை எண்.38, பொன்னையாதேவர் தெரு, கெங்குவார்பட்டி கிராமம் மற்றும் டவுன் பஞ்சாயத்து, பெரியகுளம் தாலுகா, தேனி மாவட்டம் என்னும் முகவரியில் 2194 ½ சதுர அடி நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள வீட்டு கட்டிடம், அதன் கதவு எண்.2.2.14A, சொத்து வரி மதிப்பீடு எண்.2737** மற்றும் அதனுடன் டெபாசிட்டுகள் மற்றும் பிற அனுமந்த உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கு திசையில் 44 அடி, மேற்கு திசையில் 49 ½ அடி, கிழக்கு திசையில் 50¼ அடி, ஆகமொத்தம் 2194 ½சதுர அடி. எல்லைகள்: வடக்கு: மனை எண்.18, கிழக்கு: மனை எண்.37, தெற்கு: மனை எண்.39, மேற்கு: 15 அடி கிழக்கு-மேற்கு பொது வழிப்பாதை. சப்-டிவிஷன் சர்வே எண்.223/1A1A1. | | | | | |
| 2. | 1602210170000118 / 1.Mrs.மனோகரி இளஞ்செழியன் 2.Mr. இளஞ்செழியன் | (I) 17.02.2024 (ii) 16.02.2024 அன்றுள்ளபடி ₹ 6,13,923/- (ரூபாய் ஆறு லட்சத்து பதிமூன்றாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து மூன்று மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.06.2024 & நேரடி சுவாதீனம் - 21.06.2025 | 24.07.2025 அன்றுள்ளபடி ₹8,63,005.63 (ரூபாய் எட்டு லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து ஐந்து மற்றும் பைசா அறுபத்து மூன்று மட்டும்) | ₹ 8,64,000/- (ரூபாய் எட்டு லட்சத்து அறுபத்து நான்காயிரம் மட்டும்) | ₹ 86,400/- (ரூபாய் எண்பத்து ஆறாயிரத்து நானூறு மட்டும்) |
| **சொத்து விவரம்:** பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் கம்பம் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட நத்தம் சர்வே எண். 775/1, புதிய நத்தம் சர்வே எண்.2240/27, கதவு எண்.222, (மதிப்பீடு வரி எண்.959), வார்டு எண்.2 (பஞ்சாயத்து வார்டு எண்.5), **உடையார் தெரு, கருணாக்காமுதன்பட்டி, கீழகூடலூர் (கிழக்கு) கிராமம் என்னும் முகவரியில் வடக்கு பக்கத்திலுள்ள வீட்டு மனையின் பரப்பு கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 48.5 அடி, வடக்கு தெற்காக இரண்டு பக்கமும் 15.5 அடி, ஆக மொத்தம் 751 ¾ சதுர அடி மற்றும் RCC தளம்போட்ட கடை மற்றும் ஷீட் போட்ட தளம்போட்ட கட்டிடங்கள்** அதனுடன் அனைத்து வசதிகள். மின்சார இணைப்பு S.C. No: 05-559-006-1627 அதனுடன் தண்ணீர் குழாய் இணைப்பு மதிப்பீடு எண்.101 மற்றும் அனைத்து இதர வழக்கமான உரிமைகள். மேற்சொன்ன சொத்தானது முன்னர் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ளது (மேலும் முன்னர் பஞ்சாயத்து வார்டு எண்.4, பழைய வரி மதிப்பீடு எண்.662, மதிப்பீடு எண்.663) கீழகூடலூர் (கிழக்கு) கிராமம். எல்லைகள்: மேற்கு: பொன்னம்மாள் மற்றும் பால்ராஜ்-க்கு சொந்தமான வீட்டு மனை, தெற்கு: வீட்டு மனையின் மீதமுள்ள பகுதி, வடக்கு: தங்கசாமி, கரம்னானிதேவர் வீட்டு மனை, கிழக்கு: வடக்கு தெற்கு தெரு. | | | | | |
| **கிளை அலுவலகம்: எண்.2/18, அக்ரஹாரம் தெரு, முள்ளிப்பள்ளம் கிராமம், வாடிப்பட்டி தாலுகா, முள்ளிப்பள்ளம், மதுரை-625207** | | | | | |
| 3. | 1660210030000007 / 1.Mr.ஒச்சதேவர் C 2.Mrs.பெருமாயி | (I) 27.09.2021 (ii) 23.09.2021 அன்றுள்ளபடி ₹ 11,41,335/- (ரூபாய் பதினொரு லட்சத்து நாற்பத்து ஒன்றாயிரத்து முன்னூற்று முப்பத்து ஐந்து மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.02.2022 & நேரடி சுவாதீனம் - 21.05.2025 | 24.07.2025 அன்றுள்ளபடி ₹12,56,553.90 (ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து ஐநூற்று ஐம்பத்து மூன்று மற்றும் பைசா தொண்ணூறு மட்டும்) | ₹ 1,29,00,000/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஒன்பது லட்சம் மட்டும்) | ₹ 12,90,000/- (ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) |
| **சொத்து விவரம்:** பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் சிந்துப்பட்டி சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட **கதவு எண்.2/172, பெரியகட்டளை கிராமம், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம் என்னும் முகவரியில் சர்வே எண்.113/1 பரப்பு 0.73.5 ஹெக்டேர் அதற்கு சமமான 1 ஏக்கர் 82 செண்ட் இதில் 4 செண்ட் கிணறு நீங்கலாக, மீதம் மேற்கில் 89 செண்ட் நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள வீட்டு கட்டிடம்** மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் அனைத்து இதர அனுபந்த உரிமைகள். சொத்து வரி மதிப்பீடு எண்.386. எல்லைகள்: வடக்கு: மயானம் மற்றும் கிழக்கு மேற்கு ரோடு, கிழக்கு: சீமராஜாக்கு சொந்தமான சர்வே எண்.113/1-ல் உள்ள கிழக்கு பகுதி, மேற்கு: பாலகன், ரத்தினம்-க்கு சொந்தமான சொத்து, தெற்கு: கிழக்கு மேற்கு ரோடு. இந்த சொத்தின் பட்டா எண்.1431, சர்வே எண்.113/1A பரப்பு 0.36.0 ஹெக்டேர் மற்றும் அனைத்து அனுபந்த உரிமைகள். | | | | | |

**இ-ஏல தேதி மற்றும் நேரம் : 09.10.2025 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை**

விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: **08.10.2025** அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் **07.10.2025** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : **Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டினோ சாஜன் – 78451 92961.**

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.பிரபாகரன் Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.

i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

தேதி: 31.08.2025